மருத்துவர் அன்புமணி இராமதாஸ் M.B.,B.S., M.P.,
தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்
(முன்னாள் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர்)
தமிழ்நாடு,
இந்தியா.

10, திலக் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.
தொலைபேசி : 044-28346464 / 2894
தொலைநகல் : 044-42128351
மின்னஞ்சல்: dranbu910@gmail.com

சத்யமேவ ஜயதே

அன்புடையீர், வணக்கம்!

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய தரவரிசை நிர்ணய அமைப்பு வெளியிட்டுள்ள கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் தங்களின் பாத்திமா கல்லூரி (தன்னாட்சி) கல்லூரி தேசிய அளவில் 27–ஆவது இடத்தையும், தமிழக அளவில் 12–ஆவது இடத்தையும் பெற்றிருப்பதையறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அதற்காக தங்களின் கல்வி நிறுவனத்திற்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் மொத்தமுள்ள 100 இடங்களில் 37 இடங்களை தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்கள் கைப்பற்றியுள்ளன. அதுமட்டுமின்றி, தரவரிசைப் பட்டியலில் அதிக இடங்களைப் பிடித்திருப்பதும் தமிழகம் தான். இதற்கெல்லாம் காரணம் தங்களைப் போன்ற கல்வி நிறுவனங்களின் அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட கல்விச்சேவை தான் என்பதை மறுக்க முடியாது.

இந்தியாவின் கல்வி அமைப்பு உலக அளவில் அமெரிக்கா, சீனா ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக உலக அளவில் மூன்றாவது பெரிய கல்வி அமைப்பு ஆகும். அதேநேரத்தில் உலக அளவில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கல்வி அமைப்பு இந்தியாவுடையது ஆகும். இந்தியாவில் இன்றைய நிலையில் அரசு மற்றும் தனியார்த்துறை சார்பில் 39,071 கல்லூரிகள் இயங்குகின்றன. இவற்றில், சுமார் 65% நிறுவனங்கள், அதாவது கிட்டத்தட்ட 25,000 கல்லூரிகள் 2000–01 ஆம் ஆண்டிற்கு பிறகு கடந்த 15 ஆண்டுகளில் தொடங்கப்பட்டவை ஆகும். இந்தியாவில் உயர்கல்வி இவ்வளவு வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில், அதற்கு இணையாக உயர்கல்வியின் தரமும் பராமரிக்கப்பட வேண்டும். இந்தக் கடமையை உணர்ந்து உங்களைப் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருவதன் அடையாளம் தான் தரவரிசைப் பட்டியலில் தமிழகம் முன்னிலை வகிப்பது ஆகும்.

இந்தியாவின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 23.6 விழுக்காடாக இருக்கும் நிலையில், தமிழகத்தின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 44.8 விழுக்காடு என்ற எட்டமுடியாத அளவுக்கு உயர்ந்திருப்பதற்கு காரணம் தரமான கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு தான் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

உயர்கல்வியில் தமிழகம் சிறந்துள்ள நிலையில், அடித்தட்டு மக்களுக்கு தரமான உயர்கல்வி கிடைக்கிறதா? என்பது தான் விடை காணப்பட வேண்டிய வினாவாகும். உயர்கல்விக்கு செலவிடும் நிலையில் அடித்தட்டு மக்கள் இல்லாத நிலையில், அவர்களின் கல்வித்தேவை பெரும்பாலும் அரசு கல்லூரிகளால் மட்டுமே நிறைவேற்றப்படுகிறது. ஆனால், அடித்தட்டு மக்கள் அனைவருக்கும் அரசு கல்வி நிறுவனங்களால் மட்டுமே கல்வி வழங்க முடியாது என்பதால் இந்த விஷயத்தில் அரசின் சுமையை தங்களைப் போன்ற அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி கல்லூரிகள் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

மருத்துவர் அன்புமணி இராமதாஸ் M.B.,B.S., M.P.,
தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்
(முன்னாள் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர்)
தமிழ்நாடு,
இந்தியா.

सत्यमेव जयते

10, திலக் தெரு, தி. நகர்.
சென்னை-600 017.
தொலைபேசி : 044-28346464 / 2894
தொலைநகல் : 044-42128351
மின்னஞ்சல்: dranbu910@gmail.com

அடுத்ததாக, கல்வி என்பது முதலாளித்துவ சுரண்டல்வாதிகளின் தேவைகளுக்கு பதிலளிக்கும் வகையில் இருப்பதை விட, ஏழைகளிலும் பரம ஏழைகளாக இருக்கும் கிராமப்புற மக்களின் தேவைகளுக்கு பதிலளிக்கும் வகையில் புரட்சிகரமானதாக்கப்பட வேண்டும் (**Education should be so revolutionized as to answer the wants of the poorest villager, instead of answering those of an imperial exploiter.**) என்று தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் கூறினார்.

ஆனால், சுதந்திர இந்தியாவில் கடந்த 70 ஆண்டுகளில் கல்வியும், பொருளாதாரமும் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்திருந்தாலும் காந்தியடிகளின் இந்த கனவு மட்டும் நனவாகவில்லை. மகாத்மாவின் இந்த கனவை நனவாக்கவும், கிராமப்புற ஏழைகளின் தேவைகளை நிறைவேற்றவும் உயர்கல்வி நிறுவனங்கள் பணியாற்ற வேண்டும்.

அத்துடன், கலை–அறிவியல், வணிகவியல் என எந்தப் புலம் சார்ந்த கல்லூரிகளாக இருந்தாலும் அந்தப் புலம் சார்ந்த ஆராய்ச்சிகளில் அதிக அளவில் ஈடுபட வேண்டும். அவற்றின் மூலம் அனைத்து புலங்களிலும் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இனிவரும் காலங்களில் மேலும் பல சாதனைகளை படைக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தங்களன்புள்ள,**

**( மருத்துவர் அன்புமணி இராமதாஸ் )**

தருமபுரி நாடாளுமன்ற அலுவலகம் : எண்.56, நீதிமன்ற வளாகம், தருமபுரி - 636 701. தமிழ்நாடு. தொ.பேசி:04342-270001
தில்லி அலுவலகம் : எண்.30, ஜி.ஆர்.ஜி. சாலை, நாடாளுமன்ற இணைப்பு அருகில், புது தில்லி - 110 001. தொ.பேசி:011-2332 3533